


- வாழ்வோம்

வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

Aravindakshan B R



தலைமைச்செயலகம் 'Party Hall அல்ல!'

இடைத்தேர்தல் என்பது, இதற்கு முந்தைய ஆட்சிக்காலத்திலும் நடந்துள்ளது. கலைஞர் கருணாநிதி, அம்மையார் ஜெயலலிதா போன்றோர் ஆட்சியிலும் இடைத்தேர்தல் நடந்துள்ளது. அவர்கள், கட்சியின் வேட்பாளர்கள் வெற்றிபெற்ற பிறகு, தலைவர்கள் என்ற அடிப்படையில், ஒன்று கட்சி அலுவலகத்திற்கு (அதாவது) அறிவாலயத்திற்கு அல்லது அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்குச் செல்வார்கள். முக்கிய நிர்வாகிகள் பூச்செண்டு கொடுப்பர், சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வர். பிறகு, ஊடகங்களைச் சந்தித்துப் பேசுவர். ஆனால், ஒருபோதும் தேர்தல் வெற்றியைக் கலைஞர் கருணாநிதியோ அல்லது அம்மையார் ஜெயலலிதாவோ தலைமைச்செயலகத்தில் கொண்டாடியதில்லை.

எத்தனையோ மாநிலங்களில் பொதுத்தேர்தல் - இடைத்தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றியடைந்துள்ளது. ஆனால், ஒருபோதும் பிரதமர் அலுவலகத்திலோ அல்லது முதலமைச்சர் அறையிலோ அந்த வெற்றியை மோடியோ அல்லது பா.ஜ.க. முதலமைச்சர்களோ செய்ததில்லை. இதுவரை, இந்தியாவில் எந்தத் தலைவரும் தலைமைச்செயலகத்தில் இப்படியான 'கழுத்தறுக்கும் போஸ்' கொடுத்துப் புகைப்படம் எடுத்ததில்லை. ஏனென்றால் தலைமைச்செயலகம், குறிப்பாக முதலமைச்சர் அறை/அலுவலகம் தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் இடமல்ல என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் வெற்றியை முதலமைச்சர் விஜய், அமைச்சர்கள் கொண்டாடுவது, நிச்சயம் தவறே அல்ல. பூங்கொத்தோடு நிற்காமல் இன்னும்கூட பிரம்மாண்டமாகக் கொண்டாடலாம். அதே நேரம், ஓர் அரசியல் கட்சிக்குத் தேர்தலில் வெற்றிபெறுவது, தோல்வியடைவது சகஜமான ஒன்று. ஆனால், தலைமைச்செயலகம் என்பது இந்த மாநிலத்தின் 8 கோடி மக்களுக்கான அரசு நிர்வாகத்தின் தலைமைப் பீடம். அந்தக் கட்டடம், நிச்சயம் தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் இடமல்ல. சி.எம்.அறை / அலுவலகத்தில் தேர்தல் வெற்றியைக் கொண்டாடி, கழுத்தை வெட்டுவது போல போஸ் கொடுத்துப் புகைப்படம் எடுப்பதெல்லாம் கொஞ்சமும் பொறுப்பற்ற, நாகரிகமற்ற செயல் என்பதை உணர வேண்டும். அதுவும் முதலமைச்சர் அலுவலகத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள @TNDIPR NEWS-ன் புகைப்படக் கலைஞர் மூலமாகவே போட்டோ எடுத்ததெல்லாம் முற்றிலும் சட்டவிரோதமான செயல்.

இனி வரும் காலத்தில், இடைத்தேர்தல் வெற்றியை த.வெ.க., பனையூர் அலுவலகத்திலோ அல்லது விஜய்யின் பங்களாவிலோ அல்லது பட்டினப்பாக்கம் வீட்டிலோ வைத்துக்கொள்ள வேண்டும். அரசியலமைப்பின் பேரில் உறுதிமொழி ஏற்றுள்ள விஜய், அதை மீண்டுமொரு முறை படித்துப்பார்க்க வேண்டும். ஜனநாயகத்தின் கோயிலான சட்டமன்றம் அமைந்துள்ள தலைமைச்செயலகத்திற்குக் கொஞ்சமாவது மரியாதை தர வேண்டும்.

தலைமைச்செயலாளர் சாய்க்குமார், தலைமைச்செயலகத்தைக் கட்சியின் அடையாள அட்டை கொடுக்கும் இடமாகவும் தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் பார்ட்டி ஹாலாகவும் மாற்றுவதை, என்ன நடந்தால் எனக்கென்ன என்கிறரீதியில் வேடிக்கை பார்ப்பது சரியல்ல!

Amutha



மதுராந்தகத்தில் முட்டை... தாராபுரத்தில் வீச்சு... மக்களுக்கு மட்டும் தினமும் பியூஸ் போச்சு! மக்கள் கேட்டது மின்சாரம்... கிடைச்சதோ பரோட்டா மாஸ்டர்! கரன்ட் கேட்டா கரண்டியைக் காட்டுறாரு... பில் கேட்டா பல்லைக் காட்டுறாரு!

Jaya Kanagaraja



டெல்லியில் போராடும் இளைஞர்களைப் பா.ஜ.க. கைது செய்கிறது. தமிழ்நாட்டில் போராடும் இளைஞர்களை TvK கைதுசெய்கிறது. ராகுல் காந்தியும் & காங்கிரஸும் இதுக்கு என்ன சொல்லப் போறாங்க? டெல்லியில் ஒரு நிலைப்பாடு! தமிழ்நாட்டில் ஒரு நிலைப்பாடா?

த.வெ.க.வின் ராஜ விஸ்வாசம்!

`நீட் எதிர்ப்பு', `காஷ்மீர் சிறப்புரிமை பறிப்புக்குக் கண்டனம்', `ஜி.எஸ்.டி. எதிர்ப்பு', `குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு',`வக்ஃபு வாரிய மசோதாவுக்கு எதிர்ப்பு', `தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிக்க முயல்வதற்கு எதிர்ப்பு', `இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு' என முந்தைய திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டை சுயமரியாதை மிக்க மாநிலமாகக் காத்து நின்றது. ஆனால் இன்றைய த.வெ.க. அரசோ, ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார மிரட்டல்களுக்கு அஞ்சி நடுங்கும் மாநில அரசுகளின் பட்டியலில், தமிழ்நாட்டை முதல் இடத்தில் நிறுத்தி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் அவமதித்துக்கொண்டிருக்கிறது.

எஸ்.ஐ.ஆர். குளறுபடிகளுக்கு எதிராகத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரைப் பதவி விலகக் கோரி, டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை, பா.ஜ.க. அரசு ஒடுக்கியதற்குக் கொஞ்சமும் குறைவில்லாமல், தமிழ்நாட்டிலும் அதே பாணியைக் கடைப்பிடித்திருக்கிறது, த.வெ.க. ஏற்கெனவே, `நீட்' தேர்வுக்கு எதிராகச் சில மாதங்களுக்கு முன்பு, இளைஞர்கள் நாடுதழுவிய போராட்டத்தில் ஈடுபட்ட போதும், பா.ஜ.க.வுக்கு ராஜ விஸ்வாசத்தைக் காட்டும் விதமாக, தமிழ்நாட்டில் இளைஞர்களைக் கண்மூடித்தனமாகக் கைதுசெய்தது, த.வெ.க. அரசு தற்போதும் அதே பாணியில், தமிழ்நாட்டு இளைஞர்களைக் கையாண்டிருக்கிறது.

த.வெ.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கூட்டணி, எஸ்.ஐ.ஆர். திருத்தங்களைக் கடுமையாக எதிர்க்கிறது. ஆனால், அந்தக் கோரிக்கையை முன்வைத்துப் போராடும் இளைஞர்களை ஒடுக்குகிறது த.வெ.க. அரசு என்றால், இவர்களின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வியைச் சமூக வலைதளங்களில் பலரும் முன்வைக்கின்றனர். இதுமட்டுமல்ல,`மகாத்மா காந்தி100 நாள் வேலைத்திட்டத்தை நீக்கியதை, எதிர்க்கத் துணிவில்லாமல் அமைதிகாத்தது', `தமிழ்நாட்டிற்கான உரிய நிதிப் பங்களிப்பைக் கேட்டுப்பெற துணிச்சல் இல்லாமல் அமைதிகாப்பது',`சட்டமன்றத்தில் கூட்டணிக் கட்சியின் அமைச்சர்கள் பா.ஜ.க.வைக் கண்டித்தால்கூட பயந்துபோய் அவைக்குறிப்பில் இருந்து நீக்குவது' என பா.ஜ.க.வைப் பார்த்துப் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறது, த.வெ.க. அரசு

ஃப்ளாஷ்பேக்





வி.டி.பார்த்திபன்

கழகத் தலைவரை வரவேற்றேன்!

1995-ஆம் ஆண்டு, கழகத்தில் இருந்து வைகோ பிரிந்த காலத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நமது கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் பயணம்செய்து, இளைஞர் அணி கட்டமைப்பை வலுவாக்கினார். அப்போது, வால்பாறைப் பகுதியில் கழக நிர்வாகிகளைச் சந்திக்க வருகைதந்த தலைவர் அவர்களை, ஆனைமலை ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளராக இருந்த நான், வரவேற்று மகிழ்ந்தபோது எடுத்த படம்.

- வி.டி.பார்த்திபன், பேரூர் கழகச் செயலாளர், வேட்டைக்காரன்புதூர், கோவை தெற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி என் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: தண்பகம், 614, தண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018 வாட்ஸ்அப் என்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

ஆட்றா ராமா ஆட்றா ராமா...

'ஐயய்யோ அவர் வந்தா கூட்டம் அள்ளும். பாதுகாப்பு கொடுக்க முடியாது' என்று கலர் கலராக ரீல் விட்டார்கள். ஆனால், மதுராந்தகத்தில் விஜய் ரோடு ஷோ என்ற பெயரில் டீக்கடையில் ஆறிய டீயை ஆத்தி ஆத்திக் குடித்தார். அரசு எந்திரத்தைப் போலவே டிராக்டரை ஓட்டத் தெரியாமல் திணறினார். இனி அடுத்தடுத்து வரும் தேர்தல்களில் என்னவெல்லாம் செய்வார்?



தெரிந்து கொள்வோம்

15.06.1953

கழகத்தின் ஏடாக இருந்த `நம்நாடு'!

கழகத்தின் ஏடாக, `நம்நாடு' வெளிவரத் தொடங்கியது. மாலை நேர ஏடாக வெளிவந்த அந்த இதழ் கடைசியாக, 1972-ஆம் ஆண்டு டிசம்பர் 12- ஆம் தேதி வெளிவந்தது. கழகத்தின் கருத்துகள், கொள்கைகள், நிகழ்ச்சிகள், போராட்டங்கள் பற்றி அறிந்துகொள்ள அந்த ஏடு பெரிதும் பயன்பட்டது. 1972-இல் பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900